**கவனிக்க.-** *2010.08.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் காலாண்டுக்கான (2007, யூலை-செத்தெம்பர்) புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1668 - 2010 අගෝස්තු මස 20 වැනි සිකුරාදා - 2010.08.20**

*1668 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1275 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1280 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1274 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2010, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஓகத்து மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மொணராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் பல்லே வராதொல இல. 01 - கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2011

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கள்ளுத் தவறணையில் 2011, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2011, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையிலான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 207 ஆம் இலக்க பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாகவும் நடைமுறையிலுள்ள பொதுவிதிகளுக்கு அமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு அமைவாகவும் 2010, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரம் விற்கமுடியாவிடில் 2011, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி மீண்டும் விற்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் நாட்டில் எந்த பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரித்து நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்கான பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் இணைத்து கடித உறையின் இடது மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாக எழுதி இப்பிரதேச செயலகத்தில் வைத்திருக்கும் கேள்விப்பெட்டியில் அல்லது 'படல்கும்புர பிரதேச செயலாளரின்' பெயருக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் திறக்கும்போது கேள்விப்பத்திரதாரர்கள் சமுகம் அளிக்கலாம். கேள்விப்பத்திரங்களில் அப்படிவத்தில் ஏற்பட்டிருக்கும் எல்லா திருத்தங்களுக்கும் கேள்விப்பத்திரதாரர்கள் தமது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி அல்லாத படிவங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப்பத்திரம் திறக்கப்படும் தினமான 2010, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி கேள்விப்பத்திரதாரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் வழங்குவது 2010, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணியுடன் முடிவடையும். எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படாத கேள்விப்பத்திரங்களை அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்கள் 'எவர்' என அறிந்தவுடன் அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன் கேள்விப்பத்திரதாரர்கள் படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு இரண்டு மாத வாடகைக்கு குறைவானதாக கணிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். அத்தோடு குத்தகை நிபந்தனையில் கையொப்பம் இடல் வேண்டும். மேலதிக விபரங்கள் படல்கும்புர பிரதேச செயலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ரீ. பீ. அனுர ஹேமகுமார,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர.

பிரதேச செயலகம்,
படல்கும்புர,
2010, மாச்சு 06.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | தவறணை அமைந்த கிராமம் | திறக்கும் நேரம் | மூடும் நேரம் | வைப்புத் தொகை திகதி | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் |
|---|---|---|---|---|---|---|
| 01 | மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு | பல்லேவராதொல கமேவெல | மு. ப. 11.00- பி. ப. 4.00 | பி. ப. 2.00- பி. ப. 8.00 | ரூ. 500 | 2010, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

8-527

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டவாக்கத்தின் 7 ஆம் இலக்க பிரிவின்கீழான பகிரங்க அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : ரத்தெல்ல ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 72839
*கம்பனியின் முகவரி* : இல. 258, ஹெவ்லொக் றோட், கொழும்பு 05

கம்பனிச் செயலாளர்கள்.

8-498

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டவாக்கத்தின் 7 ஆம் இலக்க பிரிவின்கீழான பகிரங்க அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : பேர்ள் இன்னவேட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 73378
*கம்பனியின் முகவரி* : இல. ஈஸ்ட் லோவ் ப்ளொக் 06, வேர்ல்ட் ட்றேட் சென்டர், எச்சலன் ஸ்கொயா, கொழும்பு 1

கம்பனிச் செயலாளர்கள்.

8-497

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 ஆம் விதிகளின் பிரகாரம் கீழே தரப்பட்டிருக்கும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. விபரம் பின்வருமாறு :-

*கம்பனியின் பெயர்* : பிரக்ஸ்டன் கபிட்டல் பட்னர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 72954
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.07.01
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 453/1, ஹவ்லொக் றோட், கொழும்பு 6

பினான்சியல் அன்ட் பிசினஸ் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கோப்பறேட் செயலாளர்கள்.

8-499/2

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 ஆம் விதிகளின் பிரகாரம் கீழே தரப்பட்டிருக்கும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. விபரம் பின்வருமாறு :-

*கம்பனியின் பெயர்* : டேல்டினேசன் சேரன்டிப் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 72709
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.06.15
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 27 ஏ 1/2, ஆஸ்பத்திரி வீதி, தெகிவளை

பினான்சியல் அன்ட் பிசினஸ் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கோப்பறேட் செயலாளர்கள்.

8-499/1

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 ஆம் விதிகளின் பிரகாரம் கீழே தரப்பட்டிருக்கும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. விபரம் பின்வருமாறு :-

*கம்பனியின் பெயர்* : எஸ். ஏ. டீ. சீ வுட் எக்ஸ்போட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 73003
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.07.05
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 259/76ஏ, பண்டாரநாயக்கபுர மாவத்தை, கலப்பலுவாவ

பினான்சியல் அன்ட் பிசினஸ் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கோப்பறேட் செயலாளர்கள்.

8-499/3

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : எம். அன்ட் ஏ. ஒட்டோ ட்றேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 73445

*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 939/எச்2, நிவ் பார்லிமென்ட் றோட், பெலவத்தை, பத்தரமுல்லை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010, யூலை 28

சபையின் கட்டளைப்படி,

பிசினஸ் சொலுஷன்ஸ் அன்ட் செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

8-427

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : வீ. பி. டீ. என். ட்றேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 73320
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 36/2, றப்பர்வத்தை றோட், கங்கொடவில, நுகேகொடை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010, யூலை 21

சபையின் கட்டளைப்படி,

பிசினஸ் சொலுஷன்ஸ் அன்ட் செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

8-428

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : பெனெல்ஸ் டிரெக்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 73267
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 566, லேக் றோட், பொறலெஸ்கமுவ
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010, யூலை 19

சபையின் கட்டளைப்படி,

பிசினஸ் சொலுஷன்ஸ் அன்ட் செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

8-429

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் காமன் பெரேரா (பிறைவேட்) லிமிட்டெட் எனப் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமானது, குளொக் (பிறைவேட்) லிமிட்டெட் என்று 2010, யூலை மாதம் 22 ஆந் திகதி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றோம். கம்பனி பற்றிய விபரங்கள் :-

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 69314
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 14/3, வோட் பிளேஸ், கொழும்பு 7
*கம்பனியின் புதிய பெயர்* : குளொக் (பிறைவேட்) லிமிட்டெட்

சபையின் கட்டளைப்படி,

பிசினஸ் சொலுஷன்ஸ் அன்ட் செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

8-430

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : முஸ்லிம் எய்ட் மைக்ரோ கிரெடிட் (கரண்ட்டீ) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : ஜீஎல் 2097
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 219, நாவலை றோட், நுகேகொடை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010, யூலை 23

சபையின் கட்டளைப்படி,

பிசினஸ் சொலுஷன்ஸ் அன்ட் செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

8-431

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட அறிவித்தல்

இன்பிரா டெவலப்மென்ஸ் அன்ட் வென்ஷஸ் லிமிட்டெட்
பிபீ. 3846

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்படி, மேற்படி கம்பனியானது 2010 ஆம் ஆண்டு யூலை மாதம்

20 ஆந் திகதி கூட்டிணைப்புச் செய்யப்பட்டு இல. 01, டெம்பில் றோட், கொட்டுவேகொட, இராஜகிரியவில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

பி. டி. ஓ. செக்கட்டரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 65/2, சேர். சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 02.
2010.07.30.

8-433

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட அறிவித்தல்

சிட்டி அப்பரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் பிவி. 73317

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்படி, மேற்படி கம்பனியானது 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி கூட்டிணைப்புச் செய்யப்பட்டு இல. 235/12, அவிசாவளை றோட், ஒருகொடவத்த, வெல்லம்பிட்டியவில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

பி. டி. ஓ. செக்கட்டரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 65/2, சேர். சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 02.
2010.07.26.

8-434

---

## அற்றோணி தத்துவம் இரத்துச் செய்தல்

குளியாப்பிட்டிய, பன்டுல மாவத்தை, தற்போது அபு ராஸ் அல்-ஹஜ்ரி எஸ்ட், டோஹா கட்டார், த. பெ. இல. 92526 என்ற விலாசத்தில் குடியிருக்கும் அபேகொட கீகியனகே தொன் காமினி பத்திரண (தே. அ. அ. இல. : 670910202 V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசாகிய எம். ஏ. என். பியசீலி அவர்களால் 1996.05.10 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 483 என்ற அற்றோணி தத்துவப்பத்திரம் மூலமாக நாரம்மல, ரன்முத்துகலயில் குடியிருக்கும் முத்தரகே ஹேமசந்திர தர்மரத்ன ஆகிய நான், வழங்கப்பட்டிருந்த அற்றோணி தத்துவப் பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச்செய்கிறேன்.

அதன் அடிப்படையில் புரியப்படும் எவ்வித செயல்களுக்கும் நான் பொறுப்பு கூறமாட்டேனென்று இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

அபோகொட கீகியனகே தொன் காமினி பத்திரண.

8-435

---

## கம்பனியின் பெயர் மாற்றும் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பதிவு இல. பீ. வீ. 4340 ஐக் கொண்டதும் இல. 111, நீர்கொழும்பு வீதி, பேலியாகொடை எனும் முகவரியில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான "பெக்கேஜ் கெயர் (பிறைவேட்) லிமிட்டெட்", "பீசீஎல் சொலியுஷன் (பிறைவேட்) லிமிட்டெட்" என 2010, யூலை 26 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வண்ணம் பெயர் மாற்றஞ் செய்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-436

---

## அற்றோணி தத்துவப்பத்திரம் இரத்துச் செய்தல்

ஹுங்கம, பள்ளேகம, 'இரத்னகிரி'யில் வசிக்கும் உதய அபேகோன் ஜயலத் இரத்னாயக்க என்ற நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் அறிவிப்பது, அம்பலந்தொட்ட பிரசித்த நொத்தாரிசு சுதர்மா ஆர். விஜயசிங்கவினால் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆந் திகதியிட்ட 2914 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரத்தின் மூலமாக பெலியத்த, தம்முல்ல, கொஹொம்பகஹ வலவ்வ அஜந்த ரோஹன குமார என்பவரை எனது அற்றோணி தத்துவதாரராக நியமனம் செய்ததை 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 3 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்கிறேன்.

இதன் பிறகு மேற்கூறப்பட்ட அஜந்த ரோஹன குமாரவினால் எனது மேற்கூறப்பட்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரம் வாயிலாக செய்து கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியல்ல வென்றும் மேற்கூறப்பட்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரம் 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 3 ஆந் திகதியிலிருந்து செல்லுபடி யற்றது என்றும் அறிவிக்கிறேன்.

உதய அபேகோன் ஜயலத் இரத்னாயக்க.

8-439

---

## கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்
9(2) ஆம் பிரிவுக்கமைவான அறிவித்தல்

கம்பனியின் முன்னைய பெயர் : சீபீசீ அக்ரி ஃபுட்ஸ் லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீபி 692
கம்பனியின் பதிவு முகவரி : இல. 40, யோர்க் வீதி, கொழும்பு 1

கம்பனியின் புதிய பெயர் : கார்கில்ஸ் அக்ரி ஃபுட்ஸ் லிமிட்டெட்
பெயர் மாற்றிய திகதி : 2010.07.26

கார்கில்ஸ் (சிலோன்) பீஎல்சீ,
செயலாளர்கள்.

இல. 40, யோர்க் வீதி,
கொழும்பு 01

8-465

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பம்பல, காக்கா பள்ளியவில் வசிக்கும் (தே. அ. அட்டை இல. : 536034650 V) ஜயமான்ன முதலிகே வினிபிரீடா ஆகிய என்னால் ஹால்பன்வில மாரவிலவில் வசிக்கும் கச்சகடுகே ஜுட் மெல்கம் இடம் வழங்கப்பட்ட ஜே. பி. எஸ். அமரசிங்ஹ பகிரங்க நொத்தாரிசினால் எழுதி உறுதிப்படுத்திய இல. 4979 மற்றும் 2006, யூலை 21 ஆந் திகதிய அற்றோணி தத்துவத்தை இன்று முதல் இத்தால் இரத்துச்செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைவாழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

ஜயமான்ன முதலிகே வினிபிரீடா.

8-520

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் உடவலவை பீ81 குடியிருப்பு வீட்டில் வதியும் 742772969வி தேசிய ஆள் அடையாள அட்டையைக் கொண்டுள்ள திசாநாயக்க ஆராச்சிகே சமிந்த பண்டார திசாநாயக்க ஆகிய நான், 2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 5 ஆந் திகதி இரத்தினபுரி உபாலி ராஜபக்ஷ என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 3709 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித் தத்துவம் மூலம், நான் நாட்டில் இல்லாத காலத்தில் தேவையான நடவடிக்கைகளுக்காக அகலவத்த மத்துகம வீதி, 24/1 ஆம் இலக்க ஸ்தானத்தில் வதியும் எனது மனைவியான அலவத்த கங்காணம்லாகே இரேஷா ரன்மலீ ரணதுங்க என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த எல்லா அற்றோணி தத்துவ உரிமைகளையும் 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி தொடக்கம் இரத்துச்செய்துள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

இனிமேற்பட மேற்கூறப்பட்ட அற்றோணி உரிமையாளரான அலவத்த கங்காணம்லாகே இரேஷா ரன்மலீ ரணதுங்க என்பவரால் மேற்கொள்ளப்படும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இத்தால் அறிவிக்கிறேன்.

திசாநாயக்க ஆராச்சிகே சமிந்த பண்டார திசாநாயக்க.

2010.07.28.

8-454

## ஸ்பெஷலிஸ்ட் காஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)

கம்பனியின் பதிவு இல. - பீவீ 13584

### கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331 (1) ஆம் சரத்துக்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதி பொதுக்கூட்டம் 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 2 இல் அமைந்துள்ள 'எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ்' நிறுவனத்தின் 'போர்ட் றூம்' இல் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தலுக்கான கணக்கு விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அது-

(1) ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது,
(2) கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை, மற்றும்
(3) இவை பற்றிய விளக்கம் அறிவித்தல்

பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்,
ஸ்பெஷலிஸ்ட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கலைப்பாளர்கள்.

2010, ஓகத்து 05.

8-455

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டவாக்கத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

கம்பனியின் பெயர் : எல்ஓஎல்சீ செகியூரிடீஸ் லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீபி 3805
கம்பனியின் முகவரி : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய
கம்பனியின் புதிய பெயர் : எல்ஓஎல்சீ லெஷர் லிமிட்டெட்

சீ. எஸ். இம்மானுவேல்,
கம்பனிச் செயலாளர்.

2010, யூலை 14.

8-401

---

## பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(2) பிரிவிற்கு அமைய, பின்வரும் பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல் விடுக்கப்படுகிறது :-

கம்பனியின் முன்னைய பெயர் : ஸ்டபர்ட் ஹொட்டேல்ஸ் பீ.எல்.சீ.
கம்பனியின் பதிவு இலக்கம் : பீகியூ224

*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி* : 40, சேர். மொகமட் மாக்கான் மாக்கார் மாவத்தை, கொழும்பு 03
*கம்பனியின் புதிய பெயர்* : டொல்ஃபின் ஹொட்டேல்ஸ் பீ. எல். சீ.

டொல்ஃபின் ஹொட்டேல்ஸ் பீ. எல். சீ.
சார்பில் ஹேமாஸ் கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

8-403

---

## அக்ற்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்*

*(1) கம்பனியின் பெயர்* : அக்ற்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட்
*(2) கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.07.23
*(3) பதிவிலக்கம்* : பீவீ 73386
*(4) பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. எச் 1/8, பம்பலப் பிட்டி அரச தொடர் மாடி, பம்பலப்பிட்டி, கொழும்பு 6

கம்பனிச் செயலாளர்.

8-409

---

## பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்*

*கம்பனியின் பெயர்* : சஃப்றான் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 73076, *திகதி* : 2010.07.07
*பதிவு முகவரி* : இல. 42/1, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 7

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.
2010.07.19.

8-410

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்*

*கம்பனியின் பழைய பெயர்* : எக்ஸ்போ கிறீன்பீல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 70390
*பதிவு முகவரி* : இல. 23, பிரேபுறூக் வீதி, கொழும்பு 2
*கம்பனியின் புதிய பெயர்* : கிறீன்பீல்ட் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பெயர் மாற்றிய திகதி* : 2010.07.14

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.
2010.07.15.

8-411

---

## கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்*

*கம்பனியின் பழைய பெயர்* : மில்லேனியம் ஃபுறொன்டியர் பிரீமியம் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 70160
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 10/9டி, வலவ்வத்தை பிளேஸ், ஓப் கல்பொத்த றோட், நாவலை
*கம்பனியின் புதிய பெயர்* : ஜினசேன ஃபுறொன்டியர் (பிறைவேட்) லிமிட்டெட்
*பெயர் மாற்றிய திகதி* : 2010.06.04

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.
2010.07.14.

8-412

# ஏல விற்பனைகள்

## மக்கள் வங்கி - ஹக்மன கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டம் 29டி அதிகாரத்தின்கீழ் விற்பனை அறித்தல்*

### சொத்துக்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு கீழ் கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தில் 2010.09.07 ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

1. தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்திலே கந்தபடபத்துவையில் உடுபீல்லகொடயில் அமைந்துள்ள லியனகஹஹேன என்ற காணியின் இலக்கம் 11 என்ற துண்டை 1999.11.27 ஆந் திகதிக்குரிய திரு. ஈ. எம். பிரேமசிரி என்ற அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரின் இல. 99-188 என்ற வரைபடத்தின் பிரகாரம் மீண்டும் அளந்து பகிரப்பட்ட இல. 1 என்ற முப்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 30பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் பயிர்ச்செய்கை, கட்டிடம் உட்பட அனைத்துமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 2008.11.21 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும் 2009.04.30 ஆந் திகதிய "தினமின" சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.-** ஹக்மன மக்கள் வங்கிக்கு எதிராக உள்ள உடுபீல்லகொட வீதியில் இச்சொத்துக்கள் அமைந் திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** வெற்றிபெற்ற கொள்வன வாளரினால் இறுதியில் கீழ்கண்டபடி பணமாக செலுத்தல் வேண்டும் :

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக மாகாண அதிகாரிக்கு விற்பனை விலையில் 1% ;
(3) ஏல விற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர்,அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணம் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30நாட்களுக்குள், "மாத்தறை, நூபே, அனகாரிக தர்மபால மாவத்தை, இல. 215 என்ற நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிரதான அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 041-2222792, 2222822, 2224773 ; பெக்ஸ் இல. : 041-2222688.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10%தை திரும்பவும் செலுத்தாது, மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைகோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

ஜீ. பீ ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731, 071-4438516.

8-468

---

## மக்கள் வங்கி – லிபர்டி பிளாஸா கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் 29 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

### சொத்துக்கள் ஏல விற்பனை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோரளையின் பல்லேபத்துவில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட கொள்ளுப்பிட்டி 37 ஆம் வட்டாரத்தில் வரிமதிப்பீட்டு இலக்கம் 23, பாம் ஹிரோவ் அவெனியூ, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள கட்டிடம், பெருந்தோட்டங்கள் மற்றும் அனைத்துடன் காணித்துண்டு பி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் என். எம். ஆர். பிரேமரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.05.14 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 423 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு ஏ சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள பதினாலு தசம் மூன்று ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 14.35பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள 7ஏ என்ற காணித்துண்டு நிலவரைபட இல. 2705 கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/தலைப்பு ஏ935/274 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2010, செத்தெம்பர் 12 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** கொள்ளுப்பிட்டி லிபர்டி பிளாஸா வாகனம் சுற்றிச்செல்லும் சந்தியிலிருந்து டுப்ளிகேஷன் வீதி மார்க்கமாக பிரேமஸ்ரீ சுப்பர் மார்க்கட்டை கடந்து இடதுபுறமாக உள்ள பாம் கிறோவ் வீதியில் இல. 23 இல் குறிக்கப்பட்ட சொத்து வலதுகை பக்கத்தில் அமைந்திருக்கும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2010.06.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி 2010.06.15 ஆந் திகதிய ''டெயிலி நியூஸ்'', ''தினமின'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரரின் தரகு, விற்பனை விலையின் இரண்டரை வீதம் (2 1/2 %) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ''உதவி பொது முகாமையாளர், மக்கள் வங்கி, மேற்கு வலயம், இல. 11, டியூக் வீதி, கொழும்பு 1'' என்ற விலாசத்தில் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2344985, 2393678, 2387028.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை மேற்கூறப்பட்ட விலாசத்தில் பார்வையிட முடியும்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை, மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

துசித கருணாரத்ன (ஜே. பி.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 011-2572940, 011-3068185.

*8-495*

---

**செலான் வங்கி பீஎல்சீ - பொலன்னறுவை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***கல்முனை நகரசபை எல்லைக்குட்பட்ட பாண்டிருப்பு கிராமத்திலுள்ள கல்தோட்டம் எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஊ. பத்மநாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.03.20 ஆந் திகதிய 82/2003 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அத்துடன் அதனுள்ளடங்கும் நிவ் சோமநாதர் பாதையில் வரிப்பண இல. 13 ஐக் கொண்ட சொத்தும் மற்றும் சகலதுமாகும்***

**(பரப்பளவு : 12.25 பேர்ச்சஸ்)**

*(இவ்வாதனம் கல்முனையைச் சேர்ந்த துரைராஜா பகீதரன் அல்லது பகீதரன் என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2009.09.25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.02.19 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', 2009.09.21 ஆந் திகதிய ''லங்காதீப'' மற்றும் 2009.10.06 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

இவ்வாதனம் 2010.09.07 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) பிரதேச வரியும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் மற்றும் வரிகளும் ; ஏலவிற்பனையாளர் கட்டணம் (நூற்றுக்கு இரண்டரை) 2 1/2 % ; நொத்தாரிசு கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000 ; இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 ; சகல பகிரங்கப்படுத்தல் செலவு ; கொள்முதலில் மிகுதி (நூற்றுக்கு தொண்ணூறு) 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீ இல் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்கவேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- ''உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, 'செலிங்கோ செலான் டவர்', கட்டிடம், இல. 90, காலி வீதி, கொழும்பு 3, தொலைபேசி இல. : 011-2456284, 011-2456285'' உடன் தொடர்பு கொள்ளவும்.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ வீதி,
வடபுலுவ,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2211025, 071-4755974.
பெக்ஸ் இல. : 081-2211025.

*8-483*

### செலான் வங்கி பீ.எல்.சீ – நுகேகொடை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரள பல்லேபத்துவில் கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பிட்டகோட்டையில் அமைந்துள்ள வரிமதிப் பீட்டு இல. 114, பாகொட வீதியில் ரேமன்ட்வத்த அல்லது ஹலம் பலானலன்ஹவத்த என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு ஏ (அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் 1197.11.23 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 465 இல் இணைக்கப்பட்ட துண்டு 1 மற்றும் 2 மீளளவீடு செய்யப்பட்டது) கட்டிடம், மரங்கள், பெருந்தோட்டங்கள், மணல் மற்றும் அங்குள்ள அனைத்துடனும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் 1998.07.15 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 683 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு ஏ நிலவரைபட இல. 683 பதினேழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 17பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது டன் கல்கிஸ்சை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் எம் 2803/223 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.***

**மேலே விபரிக்கப்பட்ட காணி பொது விதிமுறைகளுக்கமைய வீதி ஒதுக்கத்துடன் கீழ்வருமாறு விபரிக்கப்படுகின்றது :**

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரள பல்லேபத்துவில் கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பிட்டகோட்டையில் அமைந்துள்ள ரேமன்ட்வத்த அல்லது ஹலம்பலானலன்ஹவத்த என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 4 அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு நான்கு தசம் நான்கு ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 4.45பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் நிலவரைபட இல. 465 கல்கிஸ்சை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் எம் 2805/178 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.***

*(''கடன்பட்டோர்'' என்ற வகையில் கோட்டையிலுள்ள வியாபார நிறுவனமான ஸ்ரீ விஜயா இன்டஸ்ரீஸ் என்ற பெயர் வடிவிலுள்ள வியாபார பதிவு இலக்கம் டபிள்யு 30068 இன் உரிமையாளரான நுகேகொடையைச் சேர்ந்த விஜேகோன் முதியன்சலாகே கலுபன்டா என்பவருக்காக வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** கொழும்பு-பிட்டகோட்டே வீதி மார்க்கமாக ராஜகிரிய வழியாகச் சென்று வலதுபக்கத்தில் இருக்கும் பாகொடை வீதி மார்க்கமாக 1500 மீற்றர் சென்றால் இக்குறிப்பிட்ட சொத்தை அடையலாம்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2010.03.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2010.02.27 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'' மற்றும் ''லங்காதீப'' பத்திரிகைகளையும் மற்றும் 2010.02.25 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.-** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி ஒப்பினை மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., சிலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456284.

துசித கருணாரத்ன (ஜே. பி.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 2696155, 2572940 மற்றும் 060-2068185.

8-492

---

### செலான் வங்கி பீ.எல்.சீ – வெளிவேரிய கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

***மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் கம்பஹா பதிவுப் பிரிவுக்குட்பட்ட சியனகோரள கங்காகொட பத்து ஹெலுமகர கிராமத்தில் அமைந்துள்ள லாவுலுகஹாவத்த, தல்கஹாவத்த அல்லது தவட்டகஹாவத்த என்றழைக்கப்படுகின்ற காணி அனுமதி பெற்ற நிலஅளவையாளர் ஆர். கே. பி. ராமநாயக்க என்பவரினால் 2005.06.23 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 3023 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப் பட்டதுமான துண்டு 1 அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் மூன்று றூட் இருபத் தொன்பது தசம் ஒன்று ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 29.17பே.) விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட வரைபட இல. 3023 கொண் டுள்ளது.***

**மேற்கூறப்பட்ட துண்டு 1 மீளளவீடு செய்யப்பட்ட விபரம் கீழ்வருமாறு :-**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் கம்பஹா பதிவுப் பிரிவுக்குட்பட்ட சியனகோரள கங்காகொட பத்து ஹெலுமகர கிராமத்தில் அமைந்துள்ள லாவுலுஹகாவத்த, தல்ஹகாவத்த அல்லது தவட்டஹகாவத்த என்றழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டீ. டபிள்யூ. எதிரிசிங்க என்பவரினால் 1940.06.29 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 314 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப் பட்டதுமான துண்டு சீ- அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் ஒரு ஏக்கர் எட்டு தசம் மூன்று பேர்ச்சக்கள் (1ஏ. 0றூ. 8.3பே.) விஸ்தீரணத்தையும் மிக சரியான முறையில் மூன்று றூட் இருபத்தொன்பது தசம் ஒன்று ஏழு ஐந்து பேர்சுக்கள் (0ஏ. 3றூ. 29.175பே.) விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட வரைபட இல. 314 இல் கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப்பதிவகத்தில் டீ 248/149 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

*(''கடன்பட்டோர்'' என்ற வகையில் தெக்கட்டனவைச் சேர்ந்த வியாபார பதிவு இல. எம்என் 725 கொண்ட 'லங்கா கிரனைட்' என்னும் நிறுவனத்தின் உரிமையாளரான துடுஹல அப்புபாமிலாகே டயான்னந்த என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** புதிய கண்டி வீதி வழியாக தெல்கொட சந்தியிலிருந்து பூகொட மற்றும் ஹன்வெல்ல வீதி மார்க்கமாக 2 கி. மீ. முக்கலான சந்திவரை சென்று இடதுபுறமாகத் திரும்பி கேரஹல வீதியால் சுமார் 125 கி. மீ. பிரயாணம் செய்தால் குறிக்கப்பட்ட சொத்து வலது கைப்பக்கத்தில் பச்சை நிற மதிலுடன் வீதிக்கருகாமையில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2009.10.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.09.28 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'' மற்றும் ''லங்காதீப'' பத்திரிகைகளையும் 2009.10.06 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகையையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.-** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., சிலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456284, 2456276.

துசித கருணாரத்ன (ஜே. பி.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 011-3068185, 2572940.

8-490

---

### செலான் வங்கி பீ.எல்.சீ – மொரட்டுவை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோரளையின் பல்லேபத்துவில் மொரட்டுவை நகரசபை எல்லைக்குள் கொரல்லாவெலவில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பெருந்தோட்டம், மணல் மற்றும் சகல அனைத்தும் கொண்டுள்ள 'அம்பலமேவத்த' என்றழைக்கப்படுகின்ற காணி (அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. டீ மெல் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1961.08.20 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1473 இல் மீளளவீடு செய்யப்பட்டது) அனுமதி பெற்ற நிலஅளவையாளர் ஜே. டபிள்யூ. ரொட்ரீகோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.04.24 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 2899 இன் அடையாளமிடப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 1 பதின்மூன்று பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 13பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள காணித்துண்டு கல்கிஸ்சை காணிப்பதிவகத்தில் தலைப்பு எம்2674/185 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.**

*(''கடன்பட்டோர்'' என்ற வகையில் மொரட்டுவயைச் சேர்ந்த பலமன்டடிகே சிறிமல் நவீன் பெர்னான்டோ மற்றும் குலகுலசூரிய நிலாந்தி நிர்மாலி பெரேரா என்பவர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** மொரட்டுவை மத்திய நகரத்திலிருந்து (பழைய) கொழும்பு-காலி வீதி மார்க்கமாக பெற்றோல்

